

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை ஒன்றியம், வெள்ளிமலையில் மலைப்பகுதிக்கான மகளிர் விடியல் பேருந்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 24.02.2026 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உள்ளனர்.

### கல்வராயன்மலையில் 5,695 பயனாளிகளுக்கு

# ரூ.10.16 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

கல்வராயன் மலை, பிப்.27 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை ஒன்றியம், கரியாலூர் கோடை விழா அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 24.2.2026 செவ்வாய்க்கிழமை அன்று அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கல்வராயன்மலை பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் கல்வராயன்மலை வட்டம், கரியாலூரில் நடைபெற்ற விழாவில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



கள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, சமூகநலத் துறை, கூட்டுறவுத்துறை, தோட்டக்கலைத்துறை, மாவட்ட வழங்கல் அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 5,695 பயனாளிகளுக்கு ரூ.10,16,56,013/ மதிப்பீட்டில் வன உரிமைப் பட்டா, நத்தம்/நகர்ப்புற வீட்டு மனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கல்வராயன்மலைப் பகுதி மக்களின் முன்னேற்றத்தில் தமிழக அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதன்படி, வெள்ளிமலை சின்னதிருப்பதி சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.98.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று புதிய ஆய்வு மாளிகைக் கட்டடம் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதி பழங்குடியின மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று ஏற்கனவே கடந்த 4 ஆண்டுகளில் 3,516 வன உரிமைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற விழாவில் 3,859 வன உரிமைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி மக்களின் மிக நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்வராயன்மலை பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 12 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் இணைந்து “கல்ராயன்” உழவர் உற்பத்தியாளர் நிறுவன கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கல்வராயன்மலைப் பகுதியில் விளையும் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் “கல்ராயன்” என்ற பெயரில் கூட்டமைப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்களை விற்பனைக்காக இன்றைய தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் கல்வராயன்மலைப் பகுதி பொருட்கள் அதிக அளவு விற்பனை செய்ய வாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும், கல்வராயன்மலைப் பகுதி மக்களின் பிற கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை இப்பகுதி பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் 61601 மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் மாவட்ட வன அலுவலர் பிரியதர்ஷினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ரமேஷ்குமார், கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் சி. முருகன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சுமதி, பழங்குடியினர் நல திட்ட அலுவலர் இ.அம்பேத்கர், கல்வராயன்மலை ஒன்றியக் குழு தலைவர் சி.சந்திரன், துணைத் தலைவர் ஜா.பாட்சாபீ, அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை!

# நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் “தமிழ்நாடு தலைகுனியாது” பொதுக்கூட்டம்!

## பொன்.முத்துராமலிங்கம் சிறப்புரை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

கடலூர், பிப். 27 -

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற முழக்கத்துடன் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

காடாம்புலியூர் அண்ணா திடலில் நடைபெற்ற பொ து க் கூ ட் ட த் தி ற் கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தலைமை தாங்கினார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

முன்னாள் அமைச்சர், கழக உயர்நிலைத் செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் கலந்துகொண்டு விளக்கப் பேருரை ஆற்றினார்.

கூட்டத்தில் நெய்வேலி தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி வாழ்த்துரை வழங்கினார்.

இ க் கூ ட் ட த் தி ல் மாவட்டக் கழகப் பொருளாளர் தண்டபாணி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், புகழேந்தி, ஒன்றிய அவைத் தலைவர் ராஜா, மாவட்டப் பிரதிநிதி ஆடலரசன், ஒன்றியக் கழகத் துணைச் செயலாளர் செல்வகுமார், சுமதி நந்தகோபால், ஒன்றியக் கழகப் பொருளாளர் ஐயப்பன், ஜெகநாதன், இளைஞர் அணி அமைப்பாளர் அன்பழகன், சுப்ரமணியன், பொன்னம்பலம் குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் குணசேகரன், நெய்வேலி நகரக் கழகச் செயலாளர் குருநாதன், பண்ருட்டி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சந்தோஷ்குமார், நிர்வாகிகள் குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் வீர.ராமச்சந்திரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், நெய்வேலி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன், மாவட்ட மருத்துவர் அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ், நகர இளைஞரணி செயலாளர் ஸ்டாலின், வழக்கறிஞர் அரிதாஸ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.




வேலூர் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்த “தமிழ்நாடு தலைகுனியாது” பொதுக் கூட்டத்தில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசினார். உடன் மாவட்டச் செயலாளர்கள் தெற்கு ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வடக்கு டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி., முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஒன்றியச் செயலாளர் சி.எல்.ஞானசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட வாரியாக நீதிமன்ற அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு, திருவள்ளூர் கிழக்கு, மதுரை மாநகர் ஆகிய மாவட்டங்களின் தி.மு.க. வழக்கறிஞர் அணி நீதிமன்ற அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

### பொன்னேரி நீதிமன்றம்

தலைவர் - ஜி. லோகு 69, அயநல்லூர், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஏ. முரளிதரன் 2, பரணம்பேடு கிராமம், கவரைப்பேட்டை அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எஸ். பாலமுருகன் 37, வள்ளலார் 2வது குறுக்கு தெரு, எம்.ஜி.ஒ. நகர், பொன்னேரி, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். ஜெகநாதன் தமிழ் காலனி, ஆரணி, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 2) எஸ். யுவராஜ் 9, சுந்தரராஜ் தெரு, சின்னகாவனம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 3) எஸ். கணபதி பெருமாள் கோயில் தெரு, பெரியகாவனம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 4) கே. இளையராஜா 231, பேராசிரியர் அன்பழகன் நகர், மீஞ்சூர், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 5) ஜி. ரமேஷ் 3/104, டாக்டர் அம்பேத்கர் தெரு, இருளிப்பட்டு கிராமம், அழிஞ்சிவாக்கம் அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 6) தமிழ்க்குடிமகன் 10, மூகாம்பிகை நகர், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

### கும்முடிப்பூண்டி நீதிமன்றம்

தலைவர் - எஸ். வெங்கடேசன் 27, ஸ்ரீ நிவாஸ் விவேகானந்தர் நகர், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஜெ. அலெக்சாண்டர் என்.எஸ். நகர், மாதர்பாக்கம், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எ. தீனதயாளன் 3, மணியக்காரர் தெரு, கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 601201.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சுரேஷ்பாபு பல்லாகுப்பம் கிராமம், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 2) கே. கோதண்டன் எருக்குவாய் கிராமம், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 3) எம். செங்கோடி செல்வன் 15, கோரிமேடு கிராமம், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 4) பி.கே. இளங்கோவன் பெரவள்ளூர் கிராமம், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 5) ஆர். ஜெய்காந்தி 528, ராஜாபாளையம், மங்காவரம் கிராமம், கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

### ஊத்துக்கோட்டை நீதிமன்றம்

தலைவர் - எம். பார்த்திபன் எல்லம்பேட்டை கிராமம், ஊத்துகோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - பி பாஸ்கர் டாக்டர் அம்பேத்கர் நகர், பெரியபாளையம் கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஜெ. முனுசாமி ரள்ளபாடி கிராமம், பெரியபாளையம் அஞ்சல், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். தினகரன் 119, பிராமணர் தெரு, திருக்கண்டலம் கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 2) எல். பழனி 148, சி.எஸ்.ஐ. சபை தெரு, மாபாக்கம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 3) என். மகேஷ் காக்கவாக்கம் கிராமம், தண்டலம் அஞ்சல், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 4) ஜி. தங்கபாண்டியன் 244, கோயில் தெரு, சூளைமேனி கிராமம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 5) எம். பிரகாஷ் 41, நந்திமங்கலம் கிராமம், போந்தவாக்கம் அஞ்சல், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

## மதுரை மாநகர் மாவட்டம்

### மதுரை மாவட்ட நீதிமன்றம்

தலைவர் - எஸ். ராஜமோகன் எச்.ஐ.ஜி. 1, எல்லீஸ் நகர், டி.என்.எச்.பி. காலனி, மதுரை - 1. துணைத் தலைவர் - பி. மயில்வாகனன் புதூர், முதல் தெரு, அரசரடி, மதுரை - 16.

அமைப்பாளர் - பி.எஸ். நாகராஜன் 140இ, பி.எஸ்.என். சட்ட அலுவலகம் (ம) இல்லம் 2வது தளம், தல்லாகுளம், பஸ் நிறுத்தம் எதிர்புறம், மதுரை - 625002. துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சுமேஷ் 24/27, காஜியார் சந்து, முத்துராமலிங்கதேவர் தெரு, அரசரடி, ஒத்தகடை, மதுரை - 16. 2) ஜெ. ஜேசுராஜா 22பி, ராயல் பிளாசா காம்ப்ளக்ஸ், அவுட் போஸ்ட், தல்லாகுளம், அம்பேத்கர் சாலை, மதுரை - 625002. 3) எம். பாலமுருகன் 5, ஆரப்பாளையம் மெயின் ரோடு, வைகை நகர், மதுரை - 16. 4) எஸ். கோபாலகிருஷ்ணன் எம்-88, எல்லீஸ் நகர், டி.என்.எச்.பி. காலனி, கேயஸ்ரீ சித்தா கிளினிக் அருகில், மதுரை - 16. 5) பா. பூவலிங்கம் பந்தல்குடி, 7வது தெரு, செல்லூர், மதுரை - 625002.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-02-2026.

**என்.ஆர். இளங்கோ, எம்.பி**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

திருவள்ளூர் மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஒய். நிசாமுத்தீன் அவர்களுக்கு பதிலாக, **டாக்டர் கே.எஸ். கொதுவு மீரான் உசேன்,** (305/2, டவர் - 3, கோல்டன் ஒப்லென்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், திருமால் நகர், கீழ்மா நகர், பூவிருந்தவல்லி சென்னை - 600056.), மற்றும் **எம்.ஏ. முகமது அசாருதீன்** (6, ஸ்ரீநகர், பூவிருந்தவல்லி, சென்னை - 600056) ஆகியோர் திருவள்ளூர் மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

கடலூர் மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளராக **அமீர் அப்பாஸ்,** (27, மாரியம்மன் கோவில் தெரு, பண்ருட்டி நகரம், கடலூர் மாவட்டம்.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர்களாக **மு. தாஜ்தீன்,** (2457, டிரைவர் குடியிருப்பு, மச்சுவாடி, புதுக்கோட்டை.), **ஏ. முகம்மது ரபீக்** (14, உப்புக்காய்ச்சித் தெரு, இலுப்பூர், புதுக்கோட்டை - 622102) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

### கோவை வடக்கு மாவட்டம்

கோவை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர்களாக **அ. மைக்கேல் ஆண்டனி,**(5, ராமுக்குட்டி லேஅவுட், கவுண்டம்பாளையம், கோவை - 641030.), **ஏ.வி.எம். அசரப் அலி** (30, அண்ணா நகர், கரும்புக்கடை பகுதி, கோவை - 641008) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### மதுரை மாநகர் மாவட்டம்

மதுரை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பி. முகமத் இத்ரீஸ் அவருக்கு பதிலாக **எஸ். பாலமுருகன்**, (2ஏ, மேலப்பொன்னகரம், 1வது தெரு, ஆரப்பாளையம், மதுரை - 16); ஏற்கனவே துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.தம்பிதுரை அவர்களுக்கு பதிலாக **மா. செல்வகுமார்,** (5/13, ஆண்டாள் தெரு, கே.கே. நகர், மதுரை - 625020) ஆகியோர் மதுரை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டம் கழக ரீதியாக மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜோதிராமன் அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு சென்றதால், அவருக்கு பதிலாக **ரா.பிரபுதாஸ்,** (5/சி, 3வது தெரு, புதுமண்டி, சாமிப்பிள்ளை நகர், எம்.சி. ரோடு, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக **எம். சிற்றரசு,** பி.ஏ.பி.எல்., (34, கல்யாண சுந்தரம் தெரு, மீஞ்சூர் - 601203, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-02-2026.

**என்.ஆர். இளங்கோ, எம்.பி**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ 1.69 கோடி மதிப்பீட்டில் ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு விழா திருமண மண்டபம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், ஏகாம்பரம், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் மற்றும் பலர் உள்ளனர்.